- ஸ்ரீசந்திரன்,ஜெ., shreeChandran ,J.,2004, ஐம்பெரும் காப்பியங்கள் (1-5) ,Imperum Kappiyangal(1-5) , சென்னை,வர்த்தமானன் பதிப்பகம்.
- வீரன், நெல்லூர். ஆசுகவிராஜர். Veeran,Nelluoor. Asukavirajar,2001, அரிச்சந்திர புராணம், Aricchandira Puranam,சென்னை, குமார் அசோசியேட்ஸ்.
- பாரதியார், Bharathiyar, 2018, பாரதியார் கவிதைகள்,Bharathiyar Kavithaikal,சென்னை, காளீஸ்வரி பதிப்பகம்.
- சீனப் பழமொழிகள் - விக்கி மேற்கோள்கள், https://ta.m.wikiquote.org>wiki
- நீர்-தமிழ் விக்கிப்பீடியா, https://ta.m.wikipedia.org>wiki>ந..


*****************

# வண்ணதாசனின் 'நாபிக்கமலம்' : உளவியல் சிக்கலும் தீர்வும்
# Vannadhasanin 'Naabikamalam' : Ulaviyal Sikkalum Theervum


## முனைவர் சி.அம்சவேணி | Dr. C. Amsaveni

தமிழ்த்துறை, இணைப் பேராசிரியர், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (த), கோயம்புத்தூர் – 641 028. camsaveni@gmail.com, 9659444010, 9659852010



**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் பல்வேறு வகையான சமூகச் சிக்கல்களைக் களைய ஒரு கருவியாகப் பயன்படுகிறது. அது காலத்தைப் பிரதிபலிக்கும் அங்கமாக மட்டும் இல்லாமல், காலத்தைத் தாண்டி நிற்கும் நிலையான பொருண்மைகளை எடுத்துரைப்பதாகவும் அமைகிறது. அவ்வகையில் வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் பாலியல் சிக்கல்கள் உளவியல் நோக்கில் எவ்விதம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது என்பதைக் கற்றல், கற்பித்தல் நோக்கில் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**Abstract**

Literature has been a part of resolving social issues. It serves the purpose not only to reflect time but literature is beyond it. In Naabikamalam short stories it depicts how to overcome sexual and psychological problems. still there is no proper awareness regarding sex education. There are misconception that sex is about physical relationship alone. But i is also more about Psychological trauma. So this story is about sexual realationship interconnected with human Psychology.


**திறவுச்சொற்கள் (Keywords)** – வண்ணதாசன், உளவியல், நாபிக்கமலம், சிறுகதைகள்

**ஆய்வு நோக்கம்**

பாலியல் குறித்தான தெளிவான சிந்தனை சமூகத்தில் இன்னும் பரவவில்லை. பாலியல் என்பது வெறும் உடல் சார்ந்தது என்ற சிந்தனை இக்காலச் சமூகத்தினருக்கு அதிகம் உண்டு. பாலியல் என்பது உடல் சார்ந்தது மட்டும் அல்ல, மனவுணர்களும் சார்ந்தது. மனித உளவியல் கூறுகளோடு இணைந்தது என்பதை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

## ஆய்வு அணுகுமுறை

நாபிக்கமலம் தொகுதியில் அமைந்துள்ள சிறுகதைகள் வெளிப்படுத்தும் பாலியல் கூறுகளை விளக்கிக் கூறுவதற்காக விளக்கவியல் அணுகுமுறையும் பாலியல் பதிவுகளை உளவியல் நோக்கில் ஆராய்வதால் உளவியல் அணுகுமுறையும் இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது.

## ஆய்வுச் சிக்கல்

பாலியல் உறவுகள், பாலியல் எண்ணங்கள் இவற்றால் சமூகத்தில் பல்வேறு சிக்கல் உருவாகிறது. இச்சிக்கல்களை மையப்படுத்தி, பண்பாட்டு முரண்பாடுகள் அதிகம் உருவாகின்றன. எனவே, பாலியல் குறித்தான சமூகச் சூழல்களை எடுத்துக்காட்டி உளவியல் ஆலோசனை மற்றும் உளவியல் சிந்தனையோடு மேற்கண்ட சிக்கல்களை அணுக வேண்டும் என்பதைக் கற்பிப்பதாக இக்கட்டுரை அமையும்.

## ஆய்வுப் பகுப்பு

வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுப்பில் பதின்மூன்று சிறுகதைகள் உள்ளன. இதில் ஏழு சிறுகதைகள் பாலியல் கூறுகளை மையப்படுத்தி, உளவியல் சிக்கலை வெளிப்படுத்துபவையாக அமைந்திருக்கின்றன. அதன் உள்ளடக்கங்களை வைத்து இரு பிரிவாகப் பிரிக்கலாம். அவை,

**1.தனிமைச் சூழல்**
1.1. சற்றே விலகி
1.2. இக்கரைக்கும் அக்கரைக்கும்
1.3. அகஸ்தியம்
**2. ஆண்- பெண் உறவில் புரிதலின்மையால் வரும் உளவியல் சிக்கல்**
2.1 போதாமை
2.2 காற்று வெளியிடை
2.3. நாபிக்கமலம்
2.4. இனிமேல் என்பது இதிலிருந்து

என்பனவாகும்.

## ஆய்வுப் பயன்

பாலியலைத் தவறான கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்காமல் உளவியல் சார்ந்து எதிர்கொள்ள வேண்டிய தேவையைக் கற்பிப்பது இவ்வாய்வின் பயனாகும்.

## 1.தனிமைச் சூழல்

### 1.1. சற்றே விலகி

கபாலியா பிள்ளை என்கிற முதியவர் பாலியல் எண்ணங்கள் கொண்டவர். அவரைச் சுற்றியிருக்கும் மனிதர்கள் கபாலியா பிள்ளையை நடத்துகிற பாங்கினால் அவருக்கு ஏற்படுகிற உளம்சார் சிக்கல்கள் தான் இச்சிறுகதையின் கதைக்கருவாகும்.

கபாலியா பிள்ளையின் உளவியல் சிக்கல்களை அவருடைய குடும்பத்தார் புரிந்து கொள்ளவில்லை. அவரின் மனநிலையைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றாற் போல் அவருடைய சிந்தனைகளை மாற்றியிருக்கலாம். அப்படி மாற்றியிருந்தால் சொந்த மகனே அவரை ஒரு பாலியல் குற்றவாளியாகக் கருதியிருக்க மாட்டார். கபாலியா பிள்ளைக்கு மனநல ஆலோசனை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவரது குடும்பத்தார்க்கு இல்லை. மகனின் மனைவியை, அண்டை வீட்டுப் பெண்மணிகளை, பாலியல் எண்ணங்களோடு அவர் பார்ப்பதாகக் குற்றம் சாட்டிய குடும்பத்தாருக்கு, அவருக்கு மனநல ஆலோசனை தேவை என்ற சிந்தனை எழவில்லை. மேலும் அவருடைய தனிமைச்சூழல் அவரை இன்னும் உளநோயாளியாக மாற்றிக் கொண்டிருந்தது.

பொதுவாக இச்சமூகம் உளம்சார்ந்த நோய்களைச் சிகிச்சையின் மூலம் குணப்படுத்த முடியும் என்ற அடிப்படை அறிவு பெறவில்லை. இதன் காரணம் உளவியல் நோயாளியை மனநலம் குன்றியவராக, பைத்தியக்காரர்களாகவே மட்டுமே கருதிக் கொண்டிருப்பது தான். கபாலியா பிள்ளையைப் போல் பல முதியவர்களுக்கு இது போன்ற உளவியல் சிக்கல்கள் வர அவர்களது தனிமையே காரணமாகிறது. கபாலியா பிள்ளையை பாலியல் எண்ணங்களைக் காரணங் காட்டி அவரைத் தனிமையில் வைத்திருந்தனர். அதனால் பாலியல் எண்ணங்களினால் வருகிற உளவியல் சிக்கல் இன்னும் அதிகமாக மாறியது. "அடக்கி மறைத்தல், ஒடுக்குதல் ஆகிய உள்ளப் போக்கிற்கு நேரெதிரான உளவியல் செயல்படுத்தல் அல்லது வெளிப்படுத்துதல் (Acting out) ஆகும். மனத்தில் அழுந்திக் கிடக்கும் சிக்கல்களை மறுபடியும் வெளிக்கொணர்ந்து அவற்றை மறுபடியும் நினைவின் மூலமாக, அனுபவிக்கும்படி செய்துவிட்டால் அந்தச் சிக்கல்களினால் ஏற்படும் கோளாறுகள் நீங்கி விடுகின்றன."[1] (சங்க இலக்கியத்தில் உளவியல்,ப.175.) என்கிற சிவராஜ் அவர்களின் கூற்றிற்கேற்ப கபாலியா பிள்ளையின் உளநோயினைக் குணப்படுத்த முடியும். இதனை அவரது குடும்பத்தார் உணரவில்லை.

### 1.2. இக்கரைக்கும் அக்கரைக்கும்

தனிமையினால் வருகிற உளவியல் சிக்கலுக்கு வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுதியில் உள்ள இக்கரைக்கும் அக்கரைக்கும் என்ற சிறுகதையில் வருகிற குருசாமி என்பவரும் ஒரு சான்று. தன் மனைவியை கார் விபத்தில் இழந்து விட்டு தனிமையில் வாழ்ந்து வந்தார். குருசாமியும் விபத்தில் கால் செயலிழந்து இருந்தார். அவரது உதவிக்கு, வீட்டில் வேலை செய்வதற்காக நாராயணனின் மனைவி கஸ்தூரி வருவாள். அவளிடம் குருசாமி நடந்து கொள்கிற முறைகளைப் பார்த்தால் மற்றவர்கள் தவறான உறவுமுறை கொண்டவர்கள் என எண்ணுவார்கள். ஆனால் கஸ்தூரி அவரை முழுமையாகப் புரிந்து கொண்டாள். மனைவியை இழந்து அனாதரவாக இருக்கும் முதியவருக்கு வேலை

செய்வதாக நினைத்தாள். தன் மனைவியை இழந்து வருந்தும் ஒருவர் முன் மற்றவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால் பொதுவாக ஒருவித மனக்கசப்புத் தோன்றம். ஆனால் நாராயணன் கஸ்தூரியிடம் நெருக்கமாக இருப்பதைப் பார்த்து குருசாமி மகிழ்ச்சி அடைந்தார். குருசாமியின் குறைப்பட்ட கால்கள் குறித்து வேறு யாருக்கேனும் தெரிவதில் அவருக்கு விருப்பம் இல்லை. ஆனால் அந்தக் குறை கஸ்தூரிக்குத் தெரிவதில் அவருக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. இவ்விரு கதைகளிலும் இருவேறுவிதமான உளவியல் சிக்கல்களை வண்ணதாசன் எடுத்துக் காட்டியுள்ளார்.

சற்றே விலகி சிறுகதையில் கபாலியா பிள்ளையின் பாலியல் எண்ணங்களை அவரது குடும்பத்தார் முறைப்படுத்தாமல் அவரைக் குற்றவாளியாக மட்டுமே பார்த்தனர். அதன் பொருட்டு அவரைத் தனிமையில் விட்டனர். அந்தச் சூழலை அவரை இன்னும் அதிகமாக உளவியல் நோய்க்கு ஆளாக்கியது. கபாலியா பிள்ளையின் மனைவி திரவியம் படுத்த படுக்கையாகிப் போன காலங்களில் அவரது தேவையை உணர்ந்து கொள்ள குடும்பத்தில் யாருமில்லை. அதனால் குடும்ப உறுப்பினர்கள் தன்னைக் கவனிப்பதற்காக சில செயல்களைச் செய்கிறார். அது கபாலியா பிள்ளையின் பாலியல் இச்சைகளை வெளிக்காட்டுவதாக இருக்கிறது.

இக்கரைக்கும் அக்கரைக்கும் என்ற சிறுகதையில் குருசாமி என்பவருக்கும் பாலியல் இச்சைகள் இருக்கிறது. ஆனால் அதனைத் தன்னுடைய செயல்கள் மூலம் செய்யாமல் பிறரின் மகிழ்வான தருணங்களை அதாவது கணவன் மனைவி நெருக்கங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறார். மேலும், கஸ்தூரி என்கிற வேலை செய்கிற பெண்ணிடம் உன் கணவன் எப்படியிருக்கிறார்? குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள் என அவ்வப்போது விசாரித்துத் தன்னுடைய தனிமைச் சூழலை மாற்றிக் கொள்கிறார்.

உளவியல் பிரச்சினைகள் பலவிதமாகும். அதிலும் தனிமைச் சூழலால் வருகிற பிரச்சினைகளுக்குத் தீர்வு என்பது அவர்களை ஒதுக்காமல் சரியான நேரத்தில் மனநல ஆலோசனை, குடும்பத்தாரின் அரவணைப்பு ஆகியவை தேவையான ஒன்றாகும். இது போன்ற உளவியல்சார் சிக்கல்களுக்கான தீர்வை இளைய சமுதாயத்தினரிடம் கற்பிக்கும் பொழுது எளிமையாக முதியவர்களின் உணர்வு நிலையைப் புரிந்து, அதற்கு ஏற்றாற்போல் குடும்பத்தார் நடந்து கொள்ள வழிவகை ஏற்படும்.

இதுபோன்ற கதைகளை உளவியல் அணுகுமுறையில் பார்க்கும் பொழுது படைப்பின் வழியாக சமூகத்திற்குத் தேவையான உளவியல் கண்ணோட்டங்களைக் கற்பிக்க முடியும். "இலக்கியத்தைப் புரிந்து கொள்ளவும் படைப்பின் வழியாகத் தனிமனித மற்றும் சமூக மனத்தினைப் புரிந்து கொள்ளவும், படைப்பினை மேன்மேலும் சுவையூட்டக் கூடியதாக மாற்றவும் எனப் பல கோணங்களில் வைத்துப் பார்ப்பதற்கு உளவியல் துணை நிற்கிறது. " (திறனாய்வும் அணுகுமுறையும், தி.சு.நடராசன்,ப.71) எனவே வண்ணதாசனின் சிறுகதைகளை உளவியல் கூறுகளோடு அணுகுவது சாலச்சிறந்ததாகும்.

**1.3.அகஸ்தியம்**

சமூகத்தில் உளவியல் சிந்தனைகளுக்குச் சரியான மதிப்புத் தரப்படுவதில்லை. அதனாலேயே சாதாரணமாகக் கடந்துபோகிற செயல்கள்கூட உளவியல் சிக்கல்களாக மாற்றம் பெறுகின்றன. பாலியல் எண்ணங்களை வெளிப்படுத்துகிற தன்மையைப் பொறுத்து அவை உளவியல் சார்ந்த பிரச்சனைகளால் வந்த பாலியல் எண்ணங்களா? என்பதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும்.

தனுஷ்கோடி அகஸ்தியருடன் நெருங்கிப் பழகியதற்கான காரணம் அவருடைய துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளவே. அதனால் அந்தத் துயர் மனப்பான்மையில் தன்னுடைய செயல் சரியானதா என்பதை அவன் ஆராயவில்லை.

"இன்ப வெள்ளத்தால் துன்பப் புயலால் நெஞ்சு அலையும்போது, அவற்றைப் பிறரிடம் பேசினால் ஆறுதல் உண்டாகும்."(சங்க இலக்கியத்தில் உளவியல்,ப.175) என்கிறார் சிவராஜ். அதுபோல தனக்கு ஏற்பட்ட துன்பத்திலிருந்து விடுபட ஆறுதலுக்காகவே தனுஷ்கோடி அகஸ்தியரை நாடிச் சென்றான். தன்னுடைய தங்கை இறந்த பொழுது யாருமற்ற தனக்கு ஆறுதலாய் இருந்தது அகஸ்தியர் தான். சிலகாலம் கழிந்ததும் திருமணமான பெண்ணுடன் நெருங்கிய உறவில் இருந்தது தவறு என நினைத்து அகஸதியரை விட்டு விலகுகிறான்.

அகஸ்தியர் மீது தனுஷ்கோடி கொண்ட அன்பு என்பது ஆறுதலுக்காக, தன்னுடைய துயர் களைவதற்காக ஏற்பட்டது. "பொதுவாகப் பாலியல் சார்ந்த குற்றங்கள், ஆண்களால் மட்டுமே நிகழும் என்ற கற்பிதம் சமூகத்தில் தொன்றுதொட்டு நிலவி வருகிறது. பெண்களாலும் பாலியல் சார்ந்த குற்றங்களும் பிரச்சினைகளும் தோன்றுவதும் உண்டு. இது நீரில் உள்ள குமிழி போல் பெரும்பாலும் வெளிப்படுவது இல்லை. "சில வகையான உள்ளக் கிளர்ச்சிகள் நேரடியாகக் கூறப்படுதல் தடுக்கப்படும்போது மறைமுகமான வழிகளில் வெளிப்படுத்தப்படுவது உண்டு. எடுத்துக்காட்டாக, வெறுப்புணர்வு, துன்புறுத்துவதும், தூற்றுவதுமான முறையிலும் கவலையும் அச்சமும் தொடர்ந்து அமையும், களைப்பு மற்றும் உளஞ் செய்நோயின்(psychomatic) அறிகுறிகளாகவும் வெளிப்படுத்தப்படும்." (சிவராஜ். து, டாக்டர், சங்க இலக்கியத்தில் உளவியல்,ப.166.) என்ற கருத்து இக்கதைக்குப் பொருந்தும். தனுஷ்கோடி தன்னை விட்டு விலகியதை நினைத்து வெளிப்படையாகக் கவலைப்படாதது போல் இருந்தாலும் மனதில் அந்த பாரம் மிக அதிகமாக அகஸ்தியருக்கு இருந்தது. அதனால் அவள் துயர் கொண்டாள். அகஸ்தியர் அந்நிலையிலிருந்து மீள முடியாமல் உளநோய்க்கு ஆளாகிறாள். இதனை அவளது கணவன் பழனியின் உரையாடலில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

இருவரும் சரியான புரிதலோடு இருக்கும்பொழுது பாலியலால் வருகிற உளவியல் சிக்கல்களைத் தடுக்கலாம். ஆறுதல் படுத்துவதற்குப் பாலியல் மட்டுமே வழியல்ல. இதனை தனுஷ்கோடியும் அகஸ்தியரும் புரிந்திருந்தால் இச்சிக்கல் தோன்றியிருக்காது. பெரும்பாலான தவறான பாலியல் தொடர்புகள் இதுபோன்ற ஆறுதல் கூறும் நிலையிலிருந்து தான் ஆரம்பிக்கின்றன. பிறருக்கு ஆறுதல் தருகிற செயலின் எல்லையை நாம் உணரும்போது அது நல்ல நடவடிக்கைக்கு ஆதாரமாக அமையும். இதுபோன்ற நிகழ்வுகளில் ஆண்களும் பெண்களும் தமக்கான எல்லையை வகுத்துக் கொள்ளுதல் அவசியம்.

### 2. ஆண்- பெண் உறவில் புரிதலின்மையால் வரும் உளவியல் சிக்கல்

பாலியல் எனபது ஆண் –பெண் இருபாலருக்கும் இருக்கின்ற ஒன்றாகும். இதனைத் தவறான கண்ணோட்டத்தில் அணுகும்போது அது சமூக ஒழுக்கத்திற்குப் புறம்பானதாகக் கருதப்படுகிறது. இதைப் பிரித்துணர முடியாத சிலர் சரியென்று கருதி பல தவறுகளைச் செய்கின்றனர். உடலால் துன்புறுத்துவது மட்டும் பாலியல் துன்புறுத்தல் அல்ல. மனதளவில், செய்கையில் என அனைத்துமே பாலியல் துன்புறுத்தலாகத்தான் அமையும். "பாலியல் என்பது பாலின்ப ஈடுபாடுகள், நடத்தைகள், தொழிற்பாடு பற்றிய படிப்புத் துறை ஆகும். பாலியல் துறை உயிரியல், உளவியல், சமூகவியல், மருத்துவம், புள்ளியியல், குற்றவியல்

ஆகிய துறைகளுடன் நெருங்கிய தொடர்புடையது. இது அவற்றின் அறிவையும் முறைகளையும் பயன்படுத்துகிறது." (sexology,Merriam websiter, tamil Wikipedia.) இங்ஙனம் பாலியல் குறித்த தெளிவான மதிப்பீடுகள் நம்மிடையே இருந்தால் காதல் என்கிற பெயரில் நடக்கின்ற பல பாலியல் தொல்லைகள் நீங்கும். வண்ணதாசனின் நாபிக்கமலம் சிறுகதைத் தொகுதியில் இருக்கின்ற இக்கருத்தை ஒத்த சிறுகதைகள் குறித்து இப்பகுதி விளக்குகிறது.

### 2.1. போதாமை

ஒருவரைக் குறித்து மனதில் ஏற்படுகிற எண்ணங்கள் நாளடைவில் பாலியல் சிந்தனையாக மாறும்பொழுது ஏற்படுகிற உறவுச் சிக்கல்களைக் கதை வெளிப்படுத்துகிறது. காசிராஜன், தாயம்மாள் என்ற இரு கதாபாத்திரங்களுக்கு இடையேயான புரிதலின்மையால் வரும் பாலியல் சிக்கல்தான் கதையின் மையமாக உள்ளது.

தாயம்மாளை ஒருதலையாக நேசித்து வருகிறான் காசிராஜன். அவளது இயல்பான அழகு, அவனைக் கவர்ந்திழுக்கிறது. இதனை, மறைமுகமாகவும் சிலநேரம் வெளிப்படையாகவும் தாயம்மாளிடம் காசிராஜன் வெளிப்படுத்துகிறான். மனதில் தவறான எந்த எண்ணமும் இல்லாத தாயம்மாள் ஒளிவுமறைவு எதுவும் இல்லாமல் தன் கணவனிடம் சொல்கிறாள். அவ்வளவு மனமொத்த தம்பதிகளாக தாயம்மாளும் அவன் கணவன் சபாபதியும் திகழ்கின்றனர். காசிராஜனுக்குத் தான் அவளை நேசிக்கிற அளவுக்குத் தாயம்மாளும் தன்னை நேசிக்க வேண்டும் என்கிற எண்ணம் இருக்கிறது. இது உளநோயில் ஒரு வகையாக இருக்கிறது. "மூங்கில் இலை உரசின மாதிரி உங்க சேலைத் தலைப்பு பட்டுகிட்டே இருந்த குறுகுறுப்பு அந்த ஃபோட்டோவில் என் முகத்தில தெரியும்" (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப.24.) என்று அவளின் உடல் உறுப்புகளோ, ஆடைகளோ காசிராஜன் மீது பட்டு விடாதா என ஏங்குகிறான். இது போன்ற எண்ணங்களே காலப்போக்கில் முதிர்ந்த உளநோயாக மாறுகிறது. அதுவும் அவள் திருமணமானவள் எனத் தெரிந்தும் அவன் எதிர்பார்ப்பது தவறான எண்ணமாகும். பட்டிமன்றம் பேசுவதைத் தாயம்மாள் நிறுத்திக் கொண்ட போதும் ஏதேனும் காரணம் காட்டி அவளைக் காண வேண்டும். தன் கவிதைகளை அவள் படிக்க வேண்டும். தன்னைக் குறித்த நினைவுகள் அவளிடம் இருக்கின்றனவா? என அறிய வேண்டும் என்கிற ஆவல் கொண்டிருக்கிறான். தனிமையில் அவளுடன் இருக்க எண்ணுகிறான். இதுதான் காசிராஜனுடைய உளவியல் சிக்கலாகும்.

இச்சிக்கலை நாம் புரிந்து கொள்ள உளவியல் நோக்கோடு நாம் அணுகும் போதுதான் அதற்கான தீர்வுகள் குறித்து நாம் சிந்திக்க இயலும். இதனை, உளவியல் அணுகுமுறையின் முக்கிய நிலைகளில் ஒன்றாகக் குறிப்பிடுகிறார்கள் ஆய்வாளர்கள். **"படைப்பாளியின் உள்ளத்து நிலையையும் அதற்குரிய காரணங்களையும் அறியக் கொண்டு வருதல் அதாவது படைப்பாளியின் சுய வரலாற்றைப் படைப்பில் காணுதல், குறிப்பிட்ட இலக்கியத்தில் காணப்பெறுகின்ற கதைமாந்தர்களின் உணர்வுகளையும் செயல்களையும் விளக்குதல்" (**திறனாய்வும் அணுகு முறையும், தி.சு.நடராசன்,ப.72.**)** என்பன போன்ற படிநிலைகளின் மூலம் இது போன்ற உளவியல் சிக்கல்களைப் புரிந்து கொள்ளலாம் எனக் குறிப்பிடுகின்றனர்.

### 2.2. காற்று வெளியிடை

ராஜாங்கம் என்கிற கதாபாத்திரம் மாணவப் பருவத்தில் இருக்கும் பொழுது தனது ஆசிரியர் மீது தவறான பாலியல் கண்ணோட்டத்தினைக் கொண்டுள்ளார். காலம் பல கடந்த பின்பும் அவரது எண்ணங்கள் மாறாது இருக்கின்றது. இது போன்ற பாலியல் சிக்கல்களும், சிக்கலுக்கான காரணங்களும் இச்சிறுகதையின் மையப் பொருண்மையாக உள்ளது.

ராஜாங்கத்திற்குத் தனது ஓவிய ஆசிரியரின் மனைவி குருமணி டீச்சர் மீது ஒரு ஈர்ப்பு இருந்தது. குருமணி டீச்சர் ஓவிய ஆசிரியரோடு நடந்து வருகையில் தன் நண்பன் தேவராஜ் தான் அறிமுகப்படுத்தினான். கூடவே டீச்சருக்கும் தமிழ் ஆசிரியர் மகேந்திரன் சாருக்கும் தவறான தொடர்பு உண்டு என்றும் சொன்னான். குருமணி டீச்சரைப் பார்த்த அந்த நொடியிலேயே ஆச்சியின் வீட்டிற்குப் போகும்போது அங்கு இருக்கும் பெருமாள் அத்தைதான் ராஜாங்கத்திற்கு நினைவுக்கு வந்தாள்.

பெருமாள் அத்தை, ஊருக்கு ராஜாங்கம் போகும்போது அவனைக் கொஞ்சுவாள். அது அவனுக்குப் பிடிக்கும். **"லீவுக்கு களக்காட்டு ஆச்சி வீட்டிற்குப் போகும்போது எல்லாம் பெருமாள் அத்தை ராஜாங்கத்தை முத்தம் கொஞ்சிக் கொண்டே இருப்பாள். ரொம்ப நாளைக்கு அப்புறம் கல்யாணமாகி புத்திக்குச் சரியில்லாமல் இருந்து செத்துப்போனாள். இப்போது கூட தன்னை அறியாமல் ராஜாங்கத்தின் கைக்கு கன்னத்தில் இருக்கிற எச்சில் நுரையைத் துடைத்துக் கொள்ளத் தோன்றுகிறது."** (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப.45). தனக்குப் பிடித்த பெருமாள் அத்தை சாயலில் இருக்கிற குருமணி டீச்சரின் மீது ஈர்ப்பு வந்தது அதிசயமாக இல்லை.

மகேந்திரன் சாரைப் பிடிக்கிற அளவுக்கு குருமணி டீச்சரையும் பிடிக்கும். அவர் சேலை கட்டுகிற விதம், சீரான உடல்வாகு, இயல்பான பேச்சு இவையெல்லாம் மாணவப் பருவம் தாண்டியும் திருமணமான பின்னும் ராஜாங்கத்தின் மனதில் நின்றது தான் ராஜாங்கத்தின் உளவியல் சிக்கல். ஓவிய ஆசிரியர் இறந்த பிறகு சில காலம் கழித்து குருமணி டீச்சரைப் பார்க்கும் போது அவன் மனதில் எழுகின்ற அதே உணர்வு இன்னும் மனதில் குருமணி டீச்சரின் மீது உள்ள ஈர்ப்பு எதுவுமே மாறவில்லை. டீச்சரிடம், "உங்க கையைப் பிடிச்சுகிடலாமா டீச்சர் என்றான். இப்படிக் கேட்கப்படக் காத்திருந்தது போல, ஒரு கையை அல்ல, இரண்டு கைகளையும் அவர் நீட்டினார். எழுந்து நடனம் ஆடப்போகிற ஒரு பாவனையில் ராஜாங்கம் அந்த இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டு அப்படியே இருந்தான். " (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப .50.)

"தற்கால சமூகத்தில் பாலியல் தொடர்பாகப் பேசுவதே தப்பு என்றல்லவா போதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மை யாதென யாவருக்கும் தெரியும்தானே. ஆதியில் பாலுணர்வு இல்லாமல் மனித சமூகம் ஓர் அடி கூட நகர்ந்திருக்க வாய்ப்பில்லை. பாலுறுப்புகளை கற்பனை செய்து கொள்வதிலும், தன் கற்பனைப்படி அதனை வரைந்து பார்ப்பதிலும் ஆர்வமுள்ள ஓர் ஆதிவாசியின் ஜீன் எப்போதும் எக்கால மனிதனுக்குள்ளும் பயணித்துக் கொண்டே இருக்கும். அதனால்தான் நம் ஊர் பொதுக் கழிவறைகள் எங்கும் குகைச் சித்திரவாசியின் வழிவந்தவர்கள்போல் தங்கள் அந்தரங்க சித்திரங்களை தீட்டியபடி இருக்கின்றனரோ என்று நினைக்கத் தோன்றுகிறது." (https://www.puthiyathalaimurai.com/newsview/102913/Bold-Attempt-of-ki-rajanarayanan---vayathu-vanthavargalukku-mattum-) என்கிற கி.ராவின் கூற்றுப்படி பாலுணர்வு நாம் பிறந்ததிலிருந்தே நம்முடன் இருக்கின்ற ஒரு உணர்வு ஆகும். இதனை எச்சூழலில் யாரிடம் வெளிப்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே அது ஏற்புடையதா இல்லையா எனப் பிரிக்க

இயலும். ஆசிரியர் போன்ற சமூகத்தில் போற்றப்படக்கூடியவர் மீது பாலியல் இச்சை கொள்வது தவறானது. அதனைத் திருத்தி அமைக்கவும், அவ்வுணர்விலிருந்து வெளியே வரவும் சரியான வழிகாட்டுதல் அவசியம்.

ஆண் பெண் இணைந்து இருந்தால் அது தவறான உறவு என்ற எண்ணம் நீங்க வேண்டும். போதாமை சிறுகதையில் காசிராஜன் தன் உணர்வை வெளிப்படுத்தும் போது தாயம்மாள் எந்த உணர்வையும் பதிலாகத் தரவில்லை. ஆனால் காற்றுவெளியிடை சிறுகதையில் தனக்குப் பிடித்த குருமணி டீச்சரை நீண்ட காலம் கழித்துப் பார்க்கும் போது தன் உணர்வை வெளிப்படுத்தியவுடன் பதிலுக்கு அவரும் தன் உணர்வைக் காட்டியவுடன் ராஜாங்கத்தின் இத்தனை வருட மன அழுத்தத்திற்கு விடுதலை கிடைத்தது. அது பாலியல் உணர்வாக இல்லாமல் இருந்ததால் மனதளவில் ராஜாங்கத்திற்கு மாற்றம் கிடைத்தது. பாதிக்கப்பட்டவர்களின் மனவோட்டத்தைப் புரிந்து கொண்டு நடப்பதே உளவியல் பிரச்சனைகளுக்குத் தீர்வாகும்.

பாலினப் புரிதல் ஒவ்வொருவருக்குள்ளும் வரும் பொழுது இதுபோன்ற உளவியல் சிக்கல்களைத் தவிர்க்கலாம். தாயம்மாள் காசிராஜனிடம் இன்னும் வெளிப்படையாகத் (பாலியல் ரீதியானது அல்ல என்னுடைய பழக்கம் எனத்) தன்னுடைய எண்ணங்களைச் சொல்லியிருந்தால் காசிராஜனுடைய பிரச்சனை முடிந்திருக்கும். ஏனெனில் காசிராஜன் என்றும் பாலியல் குற்றவாளி அல்ல. பாலியல் எண்ணம் கொண்டவன் அவ்வளவே. இந்த நோக்கத்தோடு ஒருவர் தன்னை அணுகும்போதே சரியான புரிதலோடு அவருக்கு விடை தரப் பழக வேண்டும். இதுவே இச்சமூகத்திற்கு இன்றைய தேவை.

### 2.3.. நாபிக்கமலம்

திருமணமாகிக் குழந்தை பிறந்தவுடன் சில பெண்களுக்கு ஏற்படும் உளவியல் சிக்கல் தான் இக்கதையின் அடித்தளம். சங்கரபாகத்தின் மீது சுந்தரி பிறந்தவுடன் கனகுவிற்கு சந்தேகம் என்ற நோய் உருவானது. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் தன் கணவனுடன் சம்பந்தப்படுத்திப் பேசி சங்கரபாகத்தைக் காயப்படுத்துவாள். ஆனால் சங்கரபாகம் அப்படி எந்தப் பெண்களோடும் முறை தவறி நடந்து கொண்டது கிடையாது. கனகு தனக்குக் குழந்தை பிறந்தவுடன் தன்னுடைய அழகெல்லாம் கெட்டுவிட்டது. அதனால் கணவன் மற்ற பெண்களுடன் பேசுகிறான், சிரிக்கிறான், அன்பளிப்புத் தருகிறான் என எண்ணுகிறாள். சிலசமயம் தான் எண்ணுவது போல் இல்லை என நினைத்தாலும் அதனை நம்பும் பொழுதுதான் கனகுவிற்கு நிம்மதி கிடைக்கிறது. தன் பெண் சுந்தரிக்கு நிச்சயமாகி இருந்த மாப்பிள்ளையின் உறவினப் பெண் வீட்டிற்கு வந்து பேசிவிட்டுப் போனாள். அவள் வந்து சென்றதையும் பற்றி, "தன்னுடைய கைகளை இரண்டு மார்புப் பக்கமும் கூப்பி வைத்துக் கொண்டு, இப்படி இப்படி ரெண்டையும் ஆட்டிக்கிட்டு அவப் பேசுவா, நீரு அவ குசுவைக் குடிச்சுகிட்டு காரு வரைக்கும் அவ பொட்டி படிக்கை எல்லாம் கொண்டி வச்சிட்டு வருவீரு. இங்கே நான் விக்கிச் செத்தால்கூட ஒரு மடக்குத் தண்ணீர் கோரிக் கொடுக்க எனக்கு நாதியில்லை." (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப .67.) என்று சங்கரபாகத்தைத் திட்டித் தீர்ப்பாள்.

கனகுவின் மனதில் சங்கரபாகம் தன்னை வெறுத்து ஒதுக்கி வேறு பெண்களின் பின்னால் சென்றுவிடக் கூடாது என்ற உணர்வே அவளது சந்தேக மனப்பான்மைக்குக் காரணம். கனகு இறக்கும் வரை அவளது மனதில் இத்தகைய எண்ணமே ஓடிக் கொண்டிருந்தது. சங்கரபாகத்தைக் குறித்த மனநோயே கனகுவின் மரணத்திற்குக் காரணமாக

அமைந்திருக்கலாம். சரியான நேரத்தில் கனகுவிற்கு மனநல ஆலோசனை கொடுக்கப்பட்டிருந்தால் இத்தகைய சிக்கல் வந்திருக்காது.

## 2.4.இனிமேல் என்பது இதிலிருந்து

தன்மேல் அக்கறை கொள்கிற ஒரு மனிதன் மேல் ஏற்படுகிற பாலியல் எண்ணங்களையும் அதனால் ஏற்படுகிற உளவியல் சிக்கல்களையும் இந்தக் கதை விளக்குகிறது.

இனிமேல் என்பது இதிலிருந்து சிறுகதையில், கோமு தன் அம்மா உடல்நலம் சரியில்லாது இருப்பதால் அவள் மீது அதிக அன்பு கொண்டவனாக இருக்கிறாள். கோமுவின் அம்மா இறந்தபிறகு நடக்கும் நிகழ்வில் இணைகிற தன்மனைவி ஆவுவின் உறவினரான பாரதி அத்தான் என்ற கதாபாத்திரம் தான் இக்கதையில் ஆவுவிற்கு ஏற்படுகிற உளவியல் சிக்கலுக்குத் தீர்வாக இருக்கிறார். அம்மாவின் இழப்பு கோமுவிற்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது. இதுபோன்ற சூழ்நிலையில் அவர்களது குடும்பத்திற்குப் பேராதரவாக இருப்பவன் பாரதி தான். ஆவுவிற்கு பாரதி அத்தான் மீது ஒரு ஈர்ப்பு இருந்தது. இதனைத் தீர்க்க பாரதி, "இந்த உலகத்துல அவனுக்குத் தெரிஞ்சது ரெண்டே ரெண்டு பொம்பிளைகள் தான். ஒண்ணு அவ்வொ அம்மை, இன்னொண்ணு நீ. இப்போ நீ வீட்டுக்குள்ளே போறியே, இதுல இருந்துன்னு வச்சுக்கோ. சரியா? (வண்ணதாசன், நாபிக்கமலம்,ப. 137.) என்று அவளைத் தட்டிக் கொடுத்தான்." என்று ஆவுவின் மனம் சார்ந்த பிரச்சனையையும் எண்ணத்தையும் மாற்றுகிறான்.

ஆண்-பெண் புரிதலின்மையால் இன்றைய சூழலில் நிறைய சிக்கல்கள் வருகின்றன. தான் நேசிக்கிற பெண் தன்னை நேசித்தே ஆகவேண்டும் என்கிற பிடிவாதமே நிறைய இளைஞர்களிடம் உளநோயாக உருமாறி ஆசிட் வீசி அந்தப் பெண்ணைத் துன்பப்படுத்தத் துணிவதும், கொலை செய்வதும் என பெரிய சிக்கல்களை உருவாக்குகிறது. இதனைப் போக்க பதின்ம வயதுகளிலேயே பாலியல் குறித்த கல்வியும், பெண்ணும் ஒரு சக உயிரி தான் அவளைப் பாலியல் நோக்கில் மட்டும் பார்ப்பது தவறான செயல் என்பதை உணர்த்துகிற பாடப்பகுதிகளும் இருக்க வேண்டும்.

அதனை ஆசிரியர்கள் கற்பிக்கும்போது பாலியல் குறித்த கல்வியாக மட்டும் அல்லாமல் உளவியல் நோக்கோடு, அது சார்ந்த சிந்தனையோடு மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது இளைஞர்களிடம் ஏற்படும் இதுபோன்ற உளவியல் சிக்கல்களையும் அதனால் வருகிற ஆபத்துகளையும் தடுக்க முடியும்.

## துணைநின்றவை


- வண்ணதாசன், (2016), நாபிக்கமலம், சென்னை: சந்தியா பதிப்பகம்.
- சிவராஜ் து, (1994), சங்க இலக்கியத்தில் உளவியல், வேலூர்: சிவம் பதிப்பகம், காந்தி நகர்.
- http://www.tamilvu.org/courses/degree/d061/d0612.pdf பேராசிரியர் தி.சு.நடராசன், திறனாய்வும் அணுகு முறையும்,
- **https://www.puthiyathalaimurai.com/newsview/102913/Bold-Attempt-of-ki-rajanarayanan---vayathu-vanthavargalukku-mattum-**


******************